கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 109/2024

2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 23-ஆம் நாள் செவ்வாய் கிழமை வாதி (**வா.சா. 2**) தரப்பு சாட்சியின் சாட்சியம்.

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிகளின் படி வள்ளியூர் முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி திருமதி.A.அன்னலெட்சுமி,M.L., அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | முத்துகுட்டி | **சமயம்** | : | |
| **த/பெ** | : | பக்கில் நாடார் | **வயது** | : | 62 |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | | : | |

**வா.சா.2:பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை** :

**1)** எனது சொந்த ஊர் கோழிக்கோட்டு பொத்தை ஜோதி நகர் என்றால் சரிதான். நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் தேங்காய் வெட்டும் தொழில் செய்து வருகிறேன். தேங்காய் வெட்டும் தொழில் எத்தனை வருடங்களாக செய்து வருகிறீர்கள் என்றால் 20 முதல் 25 வருடங்கள் இருக்கும். தற்போது வயதானதால் நீங்கள் தேங்காய் வெட்டும் தொழில் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பிள்ளைகள் பார்த்து வருகிறார்கள். நீங்கள் தேங்காய் வெட்டும் தொழிலை விட்டு எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் நான் தொழில் செய்யவில்லை எனது பிள்ளைகள் தான் செய்து வருகின்றார்கள். நீங்கள் யாருக்காக சாட்சியம் அளிக்க

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.06.23 17:31:08 +0530

வந்துள்ளீர்கள் என்றால் சக்கரவர்த்தி மகன் ராஜன் என்பவருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் எனது தகவலின் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) வழக்கு வாதி மற்றும் பிரதிவாதி உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். வாதி மற்றும பிரதிவாதி தகப்பனார் பெயர் மாத்தேயு அல்போன்ஸ் என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதி குடும்பத்திற்கு நிரைய சொத்துக்கள் உண்டு என்றால் சரிதான். நீங்கள் தேங்காய் வெட்டுவதற்கு சென்றதாக கூறியுள்ளது லெவிஞ்சிபுரம் கிராமத்தில் உள்ள சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு நடக்கும் சொத்தில் தேங்காய் வெட்ட சென்றேன் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தான் பல வருடங்களா தேங்காய் வெட்டி வருவதாக சாட்சி பதிலளிக்கிறார். தாவா சொத்தில் 2007 ம் வருடத்தில் இருந்தே தேங்காய் வெட்டி வருவதாக உங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான்.

3) வாதி தாவா சொத்து 2009 ம் வருடத்திய செட்டில் மெண்ட் ஆவணத்தின் படி பாத்தியப்பட்டதாக கட்சி செய்கின்ற நிலையில் 2007 ம் வருடத்தில் இருந்து தேங்காய் வெட்டியதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் 2009 ம் வருடத்திற்கு முன்பு இருந்தே தேங்காய் வெட்டி வருகிறேன் என்று சாட்சி கூறுகிறார். வழக்கின் பிரதிவாதியை தெரியுமா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்து சம்பந்தமாக நீங்கள் ஆவணம் எதையும் பார்த்ததில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வாதிக்கு ஆவணம் எழுதிக் கொடுத்ததாக நீங்கள் உங்கள் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணம் என்ன ஆவணம் என்று தெரியுமா என்றால் அது பாகப்பிரிவினை வைத்து பிரித்து எழுதிய ஆவணம் என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்தில் பிரதிவாதி சாகாய நிக்சன் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.23 17:31:19 +0530

4) தாவா சொத்தை பிரதிவாதி சாகாய நிக்சன் தான் அனுபவம் செய்துவருகிறார் என்றால் அவர் அனுபவம் செய்யவில்லை என்று சாட்சி கூறுகிறார். வழக்கு சொத்தை வாதி அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் மறு விசாரணை**

நீங்கள் சாட்சியம் அளிக்கும் போது சக்கரவர்த்தி மகன் ராஜனுக்காக வேண்டி சாட்சியம் அளிக்கிறேன் என்று கூறியிருந்தேன். நீதிமன்றத்தில் ராஜன் வந்திருந்தாரா என்று கேட்டபோது சாட்சி வாதியை அடையாளம் காட்டி அவர் தான் ராஜன் என்று பதிலளித்தார்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்க கேட்டு சரியென்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.23 17:31:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.